# சிறை மீட்ட பத்து

## யாமிருக்க பயம் ஏன்




தொகுப்பு:

கவிஞர் வைரமுத்து கனேசன்

பிள்ளையார் கோவில் வீதி, சேனைக்குடியிருப்பு – 01, கல்முனை

Tel: 071 9238566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை



# கழுகுமலை பத்து

கழுகுமலை தனிலுறையும் முருக வேளே
கருத்துடனே வுன்பாதமலர் தானே யோத
பழுதொன்றும் வாராமல் காக்க வேணும்
பச்சைமால் தன்மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியன்முன் நிற்கவேணும்
வரும் பிழைகள் தனையகற்றி வளியேச் செய்வாய்
தெளிவாக வுன்பாதந்துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

காடுதனில் வேங்கைமர மாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னைக் கடுவே காத்தால்
சாடிடவே மனதி லெண்ணிப் பரிசைகத்தித்
தானெடுத்தார் தவிடுபொடி யாக்க வென்று
கூடிய குறவரெல்லாம் நிமித்தங் கண்டு
குமரவேலென்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடிய வுன்பாதங் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டாத பொருள்தனைப் போலென்னாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில் யானும்
எட்டியெட்டியே வுன்னை பார்க்கும் போது
ஏமாற்றி என்னை விட்டு யேகலாமோ
சட்டமுடன் தோகைமயில் மீதி லேறிச்
சடாச்சரமாய் என்முன்னே தோற்ற வேணும்
திட்டமுடனுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கீர்த்தியுடனே யிந்தப் புவியில் யானும்
கிருபையுட துன்பதியே தேடி வாறேன்
பூர்த்தமலர் போலவுன்னை காண்ப தெப்போ
புண்ணியனே எனக்கு வரம் தருவ தெப்போ
வார்த்தையொன்று முரையாயோ வள்ளி வாழ்வே
வந்துனது சந்நிதியில் மன தன்பாகத்
தீர்தங்க ளாடிவுனைத் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

குவலயத்தில் அடியேன்யான் செய்த பாவம்
குற்றமெல்லாம் பொறுத்துனது குழந்தை போலக்
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணை தந்து
காப்பதுவுன் செயலல்லோ கார்த்தி கேயா
சவளையிளங் கன்றுதன் தாயைத் தேடி
தயங்குவது போலயான் தியங்க லானேன்
சிவலைநிற மார்பழகா செந்தூர்க் கந்தா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கூடிய மறலியென்னைப் பிடியா வண்ணம்
கொடுநரகிலே யானும் விழுந்தி டாமல்
வாடியே மனம்மெலிந்து போகா வண்ணம்
மாகவே வுன்னுடைய கீர்த்தி தந்து
பாடியே பவனொளி பவாய மென்றால்
பறக்குமே பிசாசு முதல் ஏவல் தானும்
தேடியே வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுதியுள்ள சூரனை வதையே செய்தாய்
கிளிமொழியாள் வள்ளிதினப் புனத்திலே தான்
படிமீதில் தான்பெரிய பண்டாரம் போல்
பாசி பற்றிய பழுத்த கிழவனாகித்
தடியூன்றித் தண்டு கமண்டலமும் கொண்டு
சாட்டாங்கமாய்க் குறவர்க் கெதிரே சென்றாய்
தேடிய வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கேசவனார் முருகோனே நீசெய் கோலம்
கெடிதான குமரகுரு வேடனாகி
நேசமுடன் கையிலம்புவில் கொண்டு
நிமிசமுடன் வள்ளிதினப் புனத்திலே தான்
பாசமுடன் பெண்ணே கண்ணே யென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் செய்தாய்
தேசமெல்லாந் திரிந்தலைந்தேன் உன் பாதங்காண சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கையிலே சேவற் கொடியும் வேலும்
வள்ளி தெய்வ யானையுடன் மயில்மீ தேறி
தைய நல்லாள் தீபதூபம் பிடிக்கத்
தாதியர்க ளிருபுறமுங் கவரி வீச
மெய்யுடனே ஆறுமுக ரூப மாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள் தாரும்
தெய் தெய் என்றுன் பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கொன்றை மலர் வேணியனே உனக்குத் தானே
குழந்தையாய் வந்துதித்த குமர வேளே
அண்டரெல்லா முனைக்காண வேண்டி யிங்கே
அபயமென்று கையேந்தி அணுகி நிற்பார்
தண்டை கிங்கிணிகாலில் சதங்கை கொஞ்சத்
தானோடி வந்தேயுன் ஒளியைக் காட்டி
தெண்டனிட்டே துன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதையர்க ளிருபுறங் கவரி வீசக்
குளிரான மதிமுகங் களாறுந் துண்ணக்
காதலுடன் பன்னிருகை வேலுந் துண்ணக்
கானமயில் மீதேறும் கார்த்திகேயா
வாதுடனே சோதையன் செய்கரந் தன்னை
வடிவேலால் நீறுசெய்த வானோர் கோவே
சீதமரு கோனே உன் புகழைச் சொன்னேன் சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

கல்வியே பூதமெனைப் பிடியா வண்ணம்
காத்துனது கிருபை தந்து ரட்சியுமையா
வவ்வியே மெய்மறந்து மொரு பசாசு தானம்
பவனொளி பவாய மென்றால் பறக்குமேதான்
ஒவ்வியே எனைச் சூழும் லாடன் மாடன்
ஓம்நம சிவாய மென்றால் ஓடிடாதோ
செவ்வையா யுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே

இக்கணமே இது நல்ல வேளையையா
இதோ பாரும் சன்னிதியில் திருவிழாவை
வணக்கமாய்க் கற்பூர மடவிளக்கு
வகை வகையாய்க் கன்னியர்க ளேந்துறார்கள்
எக்காளம் பேரிகை தாம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
சிக்கனமே வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# அவனாசிப் பத்து



வற்றாத பொய்கை, வளநாடு கண்டு
மலைமே லிருந்த குமரா!
உற்றார் எனக்கு ஒருபேரு மில்லை
உமையாள் தனக்கு மகனே
மூத்தாடை தந்து அடியேனை யாளும்
முருகேசன் என்ற னரசே!
வித்தாரமாக மயில்மீ திலேறி
வரவேணு மென்ற னருகே!

ஆலால முண்டோன் மகனாகி வந்து
அடியார் தமக்கும் உதவிப்
பாலூர(ல்) உண்டு கனிவாய் திறந்து
பயனஞ் செழுத்தை மறவேன்
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவாக நின்ற குமரா!
மேலான வெற்றிமயில் மீதிதேறி
வரவேணு மென்ற னருகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசல் தோறும் அருள்வே தமோத
சிவனஞ் செழுத்தை மறவேன்
முருகேச ரென்றே. அறியார் தமக்கு
முதலாகி நின்ற குமரா!
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேச(ர்) என்ற பொருளே!
மறவாமல் வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்ற னருகே!

உதிரந் திரண்டு பனியூர லுண்டு
உருவாசல் தேடி வருமுன்
ததிபோ லெழுந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்து மருள்வாய்
முதிரஞ் சிறந்த வயல் வீறு செங்கை
வடிவேல் எடுத்த குமரா!
யதிராய் நடந்து மயில்மீதி லேறி
வரவேணு மென்ற னருகே!

மண்ணாடு மீசன் மகனாரை யுன்றன்
மனைவீ டுதந்தே யருள்வாய்
வண்டூரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேலு எடுத்த குமரா!
நன்றாக வந்தே யடியேனை யாண்டு
நல்வீடு தந்த குகனே!
கொண்டாடி வெற்றிமயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே!

நீலஞ் சிறந்த குறமாது வள்ளி
நின்பாகம் வைத்த குமரா!
கால னெழுந்து வெகுபூசை செய்து
கயிறு மெடுத்து வருமுன்
மேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீர ருடனே
சாலப் பரிந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்ற னருகே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்து அடியேன்
நிலைகெட்டு யானும் புதிமீதில் நின்று
நெடுமூச் செறிய விதியோ
அலைதொட்ட செங்கை வடவேற் கடம்பா!
அடியேனை ஆளு முருகா!
மலையேறி மேயு மயில்மீ திலேறி
வரவேணு மென்ற னருகே!

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவோர்கள் வாசல்
கடனொன்று கேட்க விதியோ
வண்டூறு பூவிலிதழ் மேவுள்ளி
தெய்வானைக் குகந்த வேலா
நன்றென்று சொல்லி மயில்மீ திலேறி
வரவேணு மென்ற னருகே!

விடதூத ரோடி வரும் போது உம்மை
வெகுவாக நம்பினேனே
குறமாது வள்ளி யிடமாக வைத்து
மயிலேறி வந்த குமரா
திடமாகச் சோலை மலைமீதில் வாழும்
திருமால் தமக்கு முருகா!
வடமான பழநி வடிவேல் நாதா!
வரவேணு மென்ற னருகே!

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
உபதேச முரைத்த பரனே!
பூங்கா வனத்திலிதழ் மேவும் வள்ளி
புஜமீ திருந்த குகனே
ஆங்காரசூரர் படைவீடு சோர
வடிவேல் விடுத்த பூபா!
பாங்கான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாறுமாறு வயதான போது
அடியேன் நினைத்த படியால்
வேறேது சிந்தை நினையாம லுன்ற
னாசார சங்க மருள்வாய்
அசுரேசர் போல யமதூத ரென்னைத்
தொட்டோடக் கட்ட வருமுன்
மாறாது தோகைமயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே!

கையார உன்னைத் தொழுதேத்த மனது
கபடேது சற்று மறியேன்
ஐயா உனக்கு ஆளாகும் போது
அடியார் தமக்கும் எளியேன்
பொய்யான காயம் அறிவே ஒடுங்க
உயிர் கொண்டு போக வருமுன்
வையாளியாக மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே!

ஏதேது ஜென்ம மெடுத்தேனோ முந்தி
யிந்தப் பிறப்பி லறியேன்
மாதா பிதாநீ மாயன் தனக்கு
மருகா குறத்தி கணவா
காதோடு கண்ணை யிருளாக மூடி
உயிர்கொண்டு போக வருமுன்
வாதாடி நின்று மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**காப்பு**

பாதிமதி சூடிவரு பங்கயனின் நற்புதல்வன்
தாழ் பணிந்து பாக்கள் இசை பாடுவதற்கு - நாமமுற
நல்லாசிரிய விருத்தம் நான்குபத்துமே முடிக்க
தள்ளா தஞ் சலிசெய்வேள் காப்பு
பண்டைக் காலத்தேட்டில் பழுதடைந்து போவதையே
கண்டாக்கால் காரணமில் துன்புறவே - சண்டளவில்
விண்டோர் மகிந்துரைக்க மேதினியிலே விளங்க
வெண்தாமரையிலிருப்பாள் காப்பு

**ச. சா வரிசையில் ஆசிரிய விருத்தம்**

1.

சண்முகனார் ஐங்கரனுக்கு கிளையகோவே
தற்பரனே மெய்ப்பொருளே ஐயா வாவா
வண்மையுடன் வந்தென்க்கு வரங்கள் தாராய்
வானவர்கள் துயர் தீர்த்த அரனைர் மைந்தா
என் கண்ணெதிரே வந்து நின்று கருணைதாராய்
காயாம்பு மால்மருகா கதிரவேலே
திண்ணமுடன் உன்பாதம் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

2.

சார்பாக வந்தெனக்கு முத்தி செய்வாய்
சற்குருவே மெய்ப்பொருளே தேவர்கோவே
காரானை முகற்கிளைய கந்தவேலே
கருத்துடனே வந்தெனக்குக் கருணைதாராய்
வாராடுங் கொம்மைமுலை உமைமா தீன்ற
வளர்மணியே செழுஞ் சுடரே மயில்கடம்பா
சீராக உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

சிங்கமது கூட்டிலகப்பட்டு நின்று
தியங்கிறது போல மனங் கலங்கிறேனே
கங்கை பெறு புத்திரனே காணேனையா
கருத்துடனே வந்தெனக்குக் கருணைதாராய்
மங்கையர்கள் இருவருடன் மயில்மீதேறி
வந்தெனது சிறைமீட்பாய் வள்ளிவாழ்வே
வந்தெனஞ் செய்துன் பாதந் துதிப்பேனையா
வந்தெனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

4.

சீரான தென் கதிரை உகந்தகோவே
தென்கயிலை தன்னிலுறை தேவர் நேசா
காரனை முதற் கிளைய கந்தவேலே
கருத்துடனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
மாறான வேடர் தங்கை தன்னை நீயும்
மணஞ் செய்து வந்தொரு மாய்கைபோலே
சீரான உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

5.

சுந்தரியாள் பெற்றெடுத்த பாலா வாவா
சூரர்களை வென்றதொரு ஐயா வாவா
அந்தரத்தில் நடனமிடு மயில்மீதேறி
ஆறுமுகம் நினறிலங்கு மையா வாவா
மந்தரத்திலரசுபுரி அரனார் மைந்தா
வந்தெனது சிறை மீட்டாய் வள்ளி வாழ்கவே
வந்தனஞ் செய்துன்பாதம் துதிப்பனையா
வந்தெனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.

சூதாடிப் பஞ்சவர்கள் அரசுதோற்று
தோகையரோடே கானில் சென்றாப்போலே
வாதாடி அரசுடனே எதிர்த்துக் கொண்டு
வந்துயான் சிறைதனிலே பட்டுக்கொண்டேன்
மாதாவின் கண்காணச் சரவணையில்
வந்துதித்து வானவர்கள் துயரந் தீர்ப்பாய்
சேதாரமில்லாமல் செந்தூர்வேலே
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

7.

சென்றெதிர்த்த சூரர்களை வதையே செய்து
தேவர்களைச் சிறைமீட்ட தேவர் நேசா
மண்டலத்தில் உன்னையல்லால் வேறுதெய்வம்
வானவர்களுந்தேடிக் கண்டதில்லை
கின்றெடுத்து நிழல் காத்தோன் முருகாகோழிக்
கொடியுடைய செவ்வேளே குமரவேலே
தெண்டனிட்டு உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

8.

சேடன் முடி நின்றசையக் காளியோடு
திருநடனஞ் செய்ததொரு அரனார் மைந்தா
வாடைதனில் அகப்பட்ட கப்பலாகி
வாடுகிறேன் மறியல் வீடதனில் யானும்
காடடையது வேடன் கைக்கண்ணி தன்னில்
துட்டுண்டு நின்றதொரு உயிர்தானேன்
தேடிவந்து உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.

சைவநெறி உடையதொரு அரனார் மைந்தா
சற்குருவே மெய்ப்பொருளே தேவர்கவோவே
வையகத்தில் உன்னையல்லால் வேறு தெய்வம்
வானவர்களுந் தேடிக்கண்டதில்லை
கையறவே எனை அரசு பிடித்துக்கொண்டு
கட்டுடனே மறியல்தனில் வைத்துக்கொண்டார்
தெய்வமே யான் உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

10.

சொற்பனத்தில் வந்தெனக்கு முத்தி செய்வாய்
தோகை மயில் வாகனனே பழனிவேலா
விற்பிடித்த வேடர் தங்கை தன்னை நீயும்
வேணுமென்று வதுவை செய்து வேங்கையானாய்
கற்பதித்த தூண்போலே கலங்காவண்ணங்
காத்துனது கிருபையினால் இரட்சி ஐயா
தத்துமயில் வாகனனே பழனி வேலா
சண்முகனே சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே.

11.

சோடிழந்து பேடதுபோல் துலங்கில் பட்டுத்
துன்பவினை தன்னாலே யான் வாடுகிறேனே
காடிழந்த கலையானேன் அரவின் வாயில்
கடிபட்டு நின்றதொரு தேரையானேன்
கோடைதனில் வாடியதோர் பயிரதானேன்
குருபரனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
நாடி வந்து உன்பாதம் துதிப்பேனையா
நாயகனே சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.

சௌக்கியத்தை இழந்து யான் அரசனிட்ட
சண்டாளச் சிறைதனிலே பட்டுக்கொண்டு
மயக்கமுற்று வாடுகிறேன் வானோர் கோவே
வந்தெனது சிறைமீட்பாய் வள்ளிவாழ்கவே
முயற்களங்களில்லாத வள்ளிகூட
முன்னின்று என்னுயிரைக் காக்கவேணும்
தியக்கமுடன் உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

13.

ச்சணமே இதோபாரும் இரண்டுகையும்
இரும்பினால் மாஞ்சிட்டுக் கொண்டுபோறார்
பக்கமெல்லாம் எனக்கொருவர் துணையைக் காணேன்
பராபரனே நீயெல்லாம் வேறுதெய்வம்
முக்கணனார் புத்திரனே காணேனையா
முன்னின்று என்னுயிரைக் காக்கவேணும்
திக்கணயான் உன்பாதந் துதிப்பேனையா
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே

14.

பத்துடனே திருவிருத்தம் பாடிச்சொன்னேன்
பாலனுக்கு வரமளிப்பாய் பழனிவேலா தன்னை
குற்றமுடனிவ் விருத்தம் தன்னிலுள்ள
குறைகளையெல்லாம் பொறுத்தருளுங் குழந்தை
கற்பதித்த தூண்போலே கலங்காவண்ணங்
காத்துனது கிருபையினால் இரட்சி ஐயா
மற்பொருது சூரனுடல் வென்ற வீரா
வந்தெனது சிறைமீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே.

**ச. சா. வரிசையில் ஆசிரிய விருத்தம் முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ. வா. வரிசையில் ஆசிரிய விருத்தம்

1.

வருந்துகின்றேன் ஏழைதனில் கிரங்குமையா
வடிவேலா ஆறுமுகனே வாவா சுவாமி
இருந்தடியேன் சிறைமனக் கவலையெந்தன்
துயரமெல்லாந் தீருமையா சிவபெருமான் மகனே
வந்து கருத்தறியாத மூடனுக்கே
இந்தவேளை குற்றமென்றும் வாராமல் காக்கவேணும்
விக்னேஸ்வரா வுன்பாதம் துதிப்பேனையா
விஷ்ணுகுறை தனைதீர்த்து வருகுவாயே

2.

வாருமையா அறிமுகனே மயில்மீதேறி
வருந்துகின்றேன் நெடுநாளாய் மறியல் வீட்டில்
பாருமிதோ அன்புவையு மெந்தன்மீது
பார்த்தெனது சிறைமீட்பாய் பழனிவேலா
ஆருமில்லாப் பரதேசி யானேனிப்போ
அருமையுடன் பெற்றெடுத்த தாயாரில்ல
ஆதரித்து ஆளுமையா அடியேன் தன்னை
அருள்புரிந்து சிறைமீட்க வருகுவாயே

3.

விரும்பியே உன்பாதம் பணிந்து வாறேன்
வேறொருவர் துணையெனக்குக் காணேனையா
கரும்புதனை எறும்பு வந்து கடித்தாற்போலே
கடிக்குதையா மூட்டை யெந்தன் திரகமெல்லாம்
பொறுத்தருளக் கூடாமல் விடியுமட்டும்
புலம்பியே எனது நெஞ்சம் வாடுதையா
புள்ளிமயில் ஏறிவந்து வள்ளி கூட
புகழ்ந்தடியேன் சிறைமீட்க வருகுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.

வீரமுள்ள கொஸ்த்தாப்பர்விதான மாரும்
வெகுசனங்கள் கூடி என்னைக் கூட்டிக்கொண்டு
ஓரமுள்ள நீதி செய்து கள்ளனென்று
உபாயமதாய் மாஞ்சிட்டுக் கொண்டு போனார்
ஆரமுள்ள மயில்மீதேறி நின்று
பாருமையா பன்னிரெண்டு கண்களாலும்
பாரமுள்ள கைமாஞ்சி னோகுதையா
பட்சமுடன் சிறைமீட்க வருகுவாயோ.

5.

வுனது மனம் உருகி அருள் தருவீரென்றா
உனதன் புகழைச் சொல்லலுற்றேன் உமைதன்மைந்தா
எனது மனம் பயந்து நொந்து வாடுதையா
இதுவேளை பறந்து வந்து சிறையை மீட்பாய்
உனது மனம் கொண்டு வள்ளியரைச் சேர்வதற்கு
வனந்தனிலே வேடுவனாய்ச் சென்றாப் போலே
கனதுயர் மாகியுனைத் தெண்டனிட்டேன்
கடவுளே சிறைமீட்க வருகுவாயே

6.

வூரைவிட்டுப் பிறதேசங் கொண்டு போனார்
ஒருவருமே துணையெனக்குக் காணேனையா
வாரமிட்டு வழக்கதனை வெல்லவென்று
வாறார்கள் வெகுசனங்கள் எதிரிபக்கம்
ஆரமிட்ட மணிமார்புன மேனிதுன்ன
அன்புடனே அப்புக்காகத் திப்போவைத்து
சோரவிடா வண்ணமதாய்ப் பேசுமையா
சுவாமி தோகை மயிலேறிவந்து தோற்றுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.

வெள்ளியினால் வேலலகு நாகபாஷம்
விலங்கிட்ட கைதனிலே மாஞ்சியிட்டு
வள்ளியம்மாள் தெய்வானை தாயார்பாதம்
வந்துயான் ஓர்மனதன்பாய்த் தொண்டுசெய்வேன்
தெள்ளியதோர் வேலவர்க்குச் சொல்லுமம்மா
சிறைதனையே விலக்கிவிட வேணுமென்று
முள்ளினது முதுகிலிட்டு வருவேனையா
முன்னின்று சிறைமீட்க வருகுவாயே

8.

வேற்றுருவமாகினான் சிறையில் பட்டு
மிகமெலிந்து வாடுகின்றேன் விதிவண்ணத்தால்
மாற்றிடுவாய் இச்சிறையை வானோர்கோவே
மாற்றுவது தங்கநிற மானமேனியினே
வடிவேலா ஆறுமுகனே வாவா சுவாமி
காற்றுனக்கு வெண்சாமரம் வீசுதையா
வர்ணமயில் ஏறிவந்து வள்ளிகூட
வடிவேலே சிறைமீட்க வருகுவாயே

9.

வையகத்தில் பொய்வழக்குச் சொன்னபேரை
வடிவாக உலகிலுள்ளோர் கண்ணால் காண
மெய்யாக இவ்வுலகில் கண்முன்காண
ஏதுமொரு கேடுவரக் காட்டவேணும்
பொய்யான காயமதை நான் சுமந்து
பேரரசர் சிறையிருக்க வைத்தாய் பிரம்மா
ஐயாவே உனைப்பணிந்து தெண்டனிட்டேன்
கடவுளே சிறைமீட்க வருகுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.**

வொன்றுமறியாதெனது நெஞ்சம் உருகுதையா
தீயிலிட்ட மெழுகு போல கொண்டென்னை
கொலைசெய்ய வேணுமென்று
கூட்டமதாய் கூடியவர் பேசும் போது
கண்டுனது மனமிரங்கி அன்பு கூர்ந்து
கருத்துடனே வந்தெனக்குக் கனவில் சென்றாய்
அன்றுமுதல் இன்றளவும் உனைத்தெண்டனிட்டேன்
கடவுளே சிறைமீட்க வருகுவாயே

**11.**

வோதுமொழி தனைக்கேளும் உமைமாதீன்ற
உண்மையுள்ள தற்பரனே உமைதன் மைந்தா
தீது செய்து சண்டாளச் சிறையில் வைத்தாய்
சிவ சிவா இதனைப் போல் கொடுமையுண்டோ
சூது செய்த சண்டாளன் நெஞ்சந் தன்னில்
சூலத்தால் சூத்திடுவாய் வருத்தங்கொள்ள
மாது உமை பார்வதியும் ஈஸ்பரரும்
மனதிரங்கி சிறைமீட்க வருகுவாயே

**12.**

வெளவியிலே மரமதனைச் சேர்த்தாப் போலே
வந்து என்முன் பொய்ச்சாட்சி சொன்ன பேரைச்
கெளவியே நாகமது கடிக்கவேணும்
கதிர்காமந்தனை நினைத்தால் வினைகள் தீரும்
ஔவியே அரவமது தீண்டுதற்கு
அருள்புரிவாய் சத்துரு சிங்காரவேலே
பெளவியே பழனிமலை மீதமர்ந்து
பட்சமுடன் சிறைமீட்க வருகுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.

வ்விருத்தம் பாடினேன் உனை நினைந்து
ஏதுபிழை இருந்தாலும் பொறுத்தேயாழ்வாய்
சொல்விருத்தம் தன்னிலுள்ள குற்றமெல்லாம்
தும்பிமுகன் சொற்குற்றம் பொறுத்து ஆள
நல்விருத்தம் என்று சொல்லிப் பாடுதற்கு
நலமுடனே சரஸ்பதியென்னாவில் நிற்பாய்
எவ்வுயிர்க்கும் தாயான ஈஸ்பரனார் மைந்தா
ச்சணமே சிறைமீட்ட வருகுவாயே

**வ.வா. வரிசையில் ஆசிரிய விருத்தம் முற்றும்.**

## திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி பேரில் த.தா. வரியில் ஆசிரிய விருத்தம்

1.

தரணிபுகழ் மேவு திருக்கோவில் வாழும்
சண்முகனே உன்மீதில் பதிகம் தன்னை
அரவணிந்தோன் தன்னருளால் அடியோன் மிக்க
அருள்புரிவாய் ஆனைமுக முடையனாதி
வரமருள வேணுமம்மா வாணியென்மேல்
மாதாவே ஓர் குறையும் வாராவண்ணம்
சிகரமுறுந் திருக்கோவிலுறையுந்தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

2.

தாங்கவொண்ணா நோயதனால் அடியேன்மிக்க
சஞ்சலங்கள் உண்டு மனந் தயங்கிவாடி
ஏங்கியே புலம்புகிறேன் ஐயா நீயும்
எளியோனின் பிணியதனை அகலச் செய்வாய்
மாங்கனிக்காய் அன்று மயில்மீதிதேறி
வலமாக வந்தெதிர்த்த வள்ளி வாழ்வே
தேங்குமர மேவுதிருக்கோவில் வாழும்
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.

திகளுமணி முடியாறு முகங்களாறுந்
திருக்கரங் வீராறுஞ் சீர்கொள்வேலும்
புகழ்பெருகு வள்ளி தெய்வானையோடு
புள்ளிமயில் மீதேறிப் புகழுந்தேவா
என்அகமதிலே உற்றதுயர் தன்னை உந்தன்
அருள்வேலா லறுத்தெறியும் அமரர்கோவே
சிகரமுறுந் திருக்கோவிலுறையுந் தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

4.

தீராத குஷ்டமொடு வாத பித்தம்
சிலேட்டுமங்கள் உள்ளதொரு தீமையெல்லாம்
வாராதேயுந்தனிட நாமங் கேட்டால்
வழிவிலகி ஓடிடுமே வடிவேலோனே
காரானை முகற்கிளைய கந்தவேலே
கருத்துடனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
தாரதருந் திருக்கோவிலுறையுந் தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

5.

துன்பங்கள் அணுகிடுமோ ஐயாவுன்னைத்
தொழுதோற்குப் பஃதொன்றும் வருமோசுவாமி
அன்பாக அடியேன் சொல்விண்ணப்பந்தன்
அப்பனே கேட்டு உந்தன் அருளே செய்வாய்
வன்போடு மாமனை முன்வதைத்த மாயன்
மருகனெனச் சரவணையில் வந்த தேவே
தென்பகுதி மேவுதிருக்கோவில் வாழும்
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.

தூவி மயில் மீதேறி அடியேன் முன்னே
தோன்றியென் மீதிலுற்ற துயரந்தன்னை
ஏவலோடு பேய் பில்லி சூனியங்கள்
எல்லாமுன் கைவேலாலேறிந்தே நீக்காய்
காவிலுறை மானிடனே மழுவு மேந்துய்
சண்ணுதலோன் ஈன்றெடுத்த கந்தவேலே
தீவினைகள் மேவுதிருக்கோவில் வாழும்
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

7.

தெய்வானை தன்கொளெண்ணா முன்னந்
தேவர் தனக்குற்ற பெருஞ் சிறையை மீட்டாய்
எய்தாயே எளியேன்செய் விண்ணப்பந்தன்
எந்தையேயுன் செவியேறா திருப்பதேனோ
கொவ்வா யென் நோய்ப்பிணிகள் குலைந்தே ஓடக்
கொற்றவனே அடியேன் மேல் சித்தம் வைத்து
செய்வாய் நீ திருக்கோவிலுறையுந் தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

8.

தேடுவதற்கு மெட்டாக பெருமாளீன்ற
சேவலன் நீ மெய்பொருளே எளியேன் மிக்க
வாடுகின்றேன் ஐயாயென் முன்னே வந்து
வல்பிணியை நீக்கவரம் நல்கவேணும்
சாடியே வாகூரப் பொருப்பைக்கூறாய்
தகந்து வெள்ளை நாவல்மரம் தங்குந்தேவே
தேடுதமிழ் மேவுதிருக்கோயில் வாழும்
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.

தையநல்லாள் தங்களுக்கு அடிமையாவேன்
சாமியுன் திருவடிக்கு ஏவல் செய்வேன்
மையல் நினைவாகித் திரிந்தே தல்லால்
வள்ளலே உன்பாதம் மனதில் இல்லை
மெய்யனே இவ்வெளியேன் ப்ரேமை நீக்கி
மோட்ச வீட்டளித்தருளும் முருகவேலோ
திவ்ய புகழ்மேவு திருக்கோவில் வாழும்
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

10.

தொட்ட தண்டு பாஷமுடன் சூலங்கொண்டு
துரிதமொடு கடாஏறி இயமன்தானும்
கட்டியே இழுத்து எந்தன் ஆன்மாதன்னைக்
கலக்கமது செய்ய வருமுன்னங் காத்தருளவேணும் ஐயா
வட்டமிடு பச்சைமயில் மீதிலேறி
வடிவேலுங் கரமிலங்க வருவீரையா
திட்டமுடனே திருக்கோவிலுறையுந்தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

11.

தோராத வலுமைபெற்ற சூரன்றன்னைச்
சுடர்வேலா லறுந்தெரிந்த துரையேயென்முன்
வாராயோ வள்ளி தெய்வானையோடு
வடிவேலே இது சமயம் வருகின்றேன் யான்
பாராரும் பார்த்தன் வில்லடியும் பட்டுப்
பாசுபத மீந்தருளும் பரமனே சேயே
சேராயோ திருக்கோவிலுறையுந்தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.

தௌவையென்னை அணுகாமல் காக்கவேணும்
சண்முகனே யுன்பாதந் துதிக்கவேணும்
ஔவியங்கள் பேசாம லிருக்கவேணும்
ஆண்டவனே எம்பிணிக ளகல வேணும்
செய்யகமமதிலே பிரம்மன் றன்னைச்
சிறைசெய்த மெய்ப்பொருளே செந்தில்வேலே
திய்ய புகழ் மேவு திருக்கோவில் வாழும்
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

13.

த்தலத்தில் கற்றறியாச் சிறியேன் யானும்
ஏந்தலே யுன்மீதிற் பதிகந்தன்னை
பத்தியுடனே மூன்றுகவி தனையுன் பேரில்
பாடினேன் இவ்வெளியேன் பலரும் சொல்லி
குற்றமது வராமல் அடியேன் செய்த
குறை நீக்கி ஆண்டருளும் குமாரவேலே
சித்தமுறுத் திருக்கோவி லுறையுந்தேவே
சுவாமி சித்திரவேலாயுதனே ரெட்சிப்பாயே

**க.தா. வரிசையில் ஆசிரிய விருத்தம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அரி ஓம் நாராயணா

# ஸ்ரீ நாராயண தோத்திரப்பா....

1. கடவுளே நாராயணா வா வா என்முன்
கண்திறந்து பார்த்துலகைக் காக்கவேனும்
திடவுளமே கொண்ட ஐவர்க்கிரங்கிப் போரில்
திறமுடனே யிரக்கம் வைத்தாண்டகோவே
மடவுளமே யில்லாத மனதாலுன்னை
மனமாரத் துதித்து வந்தேன் உன்பதிக்கு
விடவுள வரணையி லுறங்கும் தேவா
வித்தகா கருணைதந்து ஆள்வாய் போற்றி.

2. காட்டினிலே பஞ்சவர்கள் போகும்போது
காதினிலே உபதேசஞ் செய்து வந்தாய்
கேட்டினிது நில்லாத வீமனுந்தான்
கர்வமுடன் அரவத்தின் வாயிற் பட்டான்
தாட்டியமாய்த் தம்பிமார் பின்னால் பட்டு
தயங்குகின்ற தருமர் மன நிலையறிந்து
வாட்டியே வந்துயிரைக் காத்த தேவா
வரமருள்வாய் அச்சுதா அருள் செய்வாயே.

3. கிட்டியே மனதிலுள்ள கதைகளெல்லாம்
கிருபையுடன் அர்ச்சுனர்க்குக் கூறிவந்தாய்
தட்டியே பொய் என்று சொன்னபோது
தடையேது விஸ்வரூபம் தானெடுத்தாய்
மட்டிலே யுலகுய்யத் தேவர் போற்ற
மனமிரங்கி வரமளித்த மாதவா நீ
பட்டியே மேய்த்த அரிபாலா தேவா
பாண்டவரைக் காத்ததுபோல் அருள் செய்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கீர்த்தியுடன் உன் புகழைப் பாடுவோர்க்குக்
கேசவனே வந்துதவி செய்ய வேண்டும்
பார்த்திபற் குரைத்தமொழி பகர வேண்டும்
பண்புள்ளோர் மனதிலருள் பரவவேண்டும்
வார்த்தைகளில் சொல்ல வொண்ணாவுன் புகழை
மாதவனே மானிடர்க்கு உரைத்து - நல்ல
தோத்திரங்கள் பாடு மடியார்கள் வாழ
துணைபுரிந்து நாராயணா அருள் செய்வாயே.

5. குவலயத்தில் நான் செய்த கொடும் பாவத்தை
குருபரனே அரிஅரிகுறை கொள்ளாது
கவலை பிணி நோய் துன்பம் நீக்கி என்னைக்
கண்கலங்கா திருக்க வரமருள்வாய் தேவா
துவள வீள வஞ்சியர்கள் துயிலை அள்ளி
தோள்மீது சுமந்து மரமேறி நின்ற
பவள இதழ் மணி மார்பா பச்சை மாலே
பக்தியுடன் உனைப் பணிந்தேன் அருள்செய்வாயே.

6. கூடியே பஞ்சவர்கள் வனவாசத்தில்
கொடும் வினைகள் வராது காக்கவேண்டும் தேவா
நாடியே விராடபுரம் சென்றபோது
நங்கை துரோபதியாளின் நலனைக் காத்தாய்
பாடியே துதித்தாடும் அடியார் தம்மை
பச்சை முகில் மேனியனே பரந்தாமா நீ
வாடியே போகாது மனமிரங்கி
வரமளித்து உயிர்காத்து இரட்சிப்பாயே.

7. கெடுதி செய்யும் மக்களை நீ வதையே செய்து
கர்வமதை யடக்கி ஆளும் கிருஷ்ண தேவா
விடுதியிட்டு வீமனுந்தான் கீசனை
வெஞ்சமரில் வெல்வதற்கு வித்தானாய் நீ
கடுகதியெனப் பஞ்சவர்க்குத் தூது சென்ற
கண்ணா உன் செயலன்றிக் காப்பதாரோ.
திடு திடென மழை பொழிய வந்தேனையா
ஸ்ரீ நாராயணா முகுந்தா அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கேசவனே உனையன்றிப் பூலோகத்தில்
கெடிதான தெய்வமில்லை உலகோருய்ய
மாதவா வைகுண்டா மாயவா நீ
வந்தெனது துயர்தீர்த்து வரங்கள் தாரும்
பேசவா வாயார உன் புகழைப்
பெரிய மனம் வைத்து எம்மை ஆழவேணும்
பாச வாழ் வினைக்கயிறு அறுந்து உந்தன்
பதமருள அருள் செய்து இரட்சிப்பாயே.

9. கை தனிலே சக்கரமும் சங்கும் கொண்டு
கடிதாக அடியாரைக் காக்கும் தேவா
பையரவில் துயில் கொள்ளும் பச்சை மாலே
பதமளித்து இவ்வேளை வந்து காரும்
மை விழியாள் பாஞ்சாலி துயரம் தீர்த்து
மண்டலத்தில் உன் புகழை மதிக்கச் செய்த
வை குண்டவாசவனே அரி கோவிந்தா
வரமளித்து உயிர் காத்து இரட்சிப்பாயே.

10. கொடும் வினைகள் வாராது காக்க வேண்டும்
குவலயத்தில் உன் புகழைப் பாடவேண்டும்
படும் பாடு அறிந்துடனே வரவும் வேண்டும்
பாரிலுள்ளோர் துயரமது பறக்க வேண்டும்
இடும்பை செய்யும் துஸ்டர்களை நாசம் பண்ணி
இவ்வுலகம் உய்ய வரம் அருள வேண்டும்
கெடும் வினைகள் நீக்கி எம்மை ஆள உந்தன்
கெருடன் மீதேறி வந்து அருள்செய்வாயே.

11. கோபாலா உனை வணங்கி நிற்கும் பேர்கள்
கோடான கோடியுண்டு இவ்விடத்தில்
பூபாலர் அனைவரும் நீரேயாகும்
புகழ் முனிவர் தேவர்களும் நீரேயாகும்
பாவாணர் கிம்புருடர், கின்னர் அட்ட
பாலகர்களும் மூர்த்திகளும் நீரேயாகும்
தேவாலயம் தேடி ஓடிவந்தேன்
ஸ்ரீ நாராயணா மூர்த்தி அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கௌவை வினை அணுகாது காத்து உந்தன்
கருணை வடிவுருவெனக்குக் காட்டொண்ணாதே
கொவ்வை யிதழ் மடமாதர் மோகந்தன்னில்
குமுறுமெனை ஆட்கொண்டு இரட்சித்தாள்வாய்
ஔவைக்கு உபதேசம் செய்தவர்க்கு
அம்மானாய் வந்துதித்த அமரர் கோவே
இவ்வையகத்திலினிப் பிறவா வண்ணம்
எனையாளும் நாராயணா இறைவா போற்றி.

13. ஐயகோ நாராயணா சுவாமி வா வா
அருள் தந்து எனதுயிரை ஆள வா வா
பொய்யகோ பூவுலக வாழ்வை நம்பும்
புத்தியினைச் சுத்திசெய்ய இப்போ வா வா
மெய்ய கோவினரிடையில் உதித்த கோவே
மேகவண்ணா அச்சுதா முகுந்தா வா வா
தெய்யகோ வென ஆடிப் பாடிவந்தேன்
ஶ்ரீ ஓம் அரி நாராயணா இரட்சிப்பாயே.

14. இரணியர்க்கு வரங்கொடுத்து மீண்டும் கொல்ல
எமனாக வந்துதித்தான் பிரகலாதன்
தரணியிலே அரியென்ற நாமமோங்கத்
தத்துவமாய் நரசின்ம ரூபமானாய்
பரணியிலே பிறந்துழன்று பாரையாண்டு
பரிவாக உன்பதியை நாடி வந்தேன்
மரணியெனா சாயுட்சிய பதமளித்து
மாதவா உயிர் காத்து இரட்சிப்பாயே.

15. மண்ணுயிரைத் தன்னுயிராய் மதிக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதியும் வேண்டும்
என்னுயிரே நூற்றிருபதாயுள் வேண்டும்
ஏழைகட் கன்பனாய் இருக்கவேண்டும்
விண்ணுயிரே மங்கை நல்லாள் மோகம் நீங்கி
மேதினியில் உனைமறவா துதிக்கவேண்டும்
என்னுயிரை எடுக்க எமன் வருமுன் நின்று
எதிர்காத்து நாராயணா இரட்சிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மாயவா அச்சுதா முகுந்தா உந்தன்
மலர்ப்பாதத்தை தேடியே ஓடிவாறேன்
தியவாழ் வெனக்கு இனி ஆகாவண்ணம்
ஸ்ரீ தரா அருள் தந்து காக்கவேண்டும்
தாயவள் உந்தியிலே பட்டதுன்பம்
தமியேனுக் கினிமேலும் ஏற்படாமல்
காயாம் பூமேக வண்ணா அரிகோவிந்தா
கடவுளே உயிர்காத்து இரட்சிப்பாயே.

முற்றும்.

# கெருடபத்து

1. ஓம் பூரணனே பதினாறு திங்கள்சேரும்
பொருந்தியே அருக்கண்பதின் எட்டாம் சேரும்
காரணனே கருமுகில் போல் மேனிசேரும்
கருணைப்பெரும் மரசரம்கலந்து வாளும்
வாரணனே லெட்சுமியோர் எட்டும் சேரும்
மதிமுகம் போல் நின்று இலங்கும்
மாயானேயா ஆரணனே ரகுராமா கெருடன் மீதில்
அன்புடனே ஏறி வந்தருள் செய்குவாயா.

2. மந்திரமோ அஷ்டசீது மெட்டுஞ்சேரும்
வாழ்கிரகமொன் பதுமை வந்துசேரும்
கந்திருவர் கணநாதர் ராசஜவர்கம்
கலகியான நால்வேதம் கலந்துவாழும்
நந்திமுதல் தேவர்களும் கவனயோகம்
நமஸ்கரித்துன் பாதநாளும் போன்ற
அந்தரமாய் நிறைந்திருக்கும் கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே எறிவந்தருள் செய்குவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூலமுதலோரெழுந்து நீர் தான் ஆகும்
மூன்றெழுத்து மைந்தெழுத்து மொழியலாமோ
சிரமுதல் ஓம் அங்உங் மங்றிந்து கென்றே
சிவனுடைய திருநாமம் நீர்தான் ஆகும்
காலமுதல் ஓம் அங்உங் மங்களங்கென்றே
கருணைபெருமீவ வெழுந்து நீர்தானாகும்
ஆலவிஷங் கையேந்துங் கெருடன் மீதில்
சுவாமி அன்புடனே எறிவந்தருள் செய்குவாய்.

4. கவ்வென்றும் கனியென்றும் ஓம்சிவாய
மென்றும் நமநம சிவசிவராசா வென்றும்
சவ்வென்றும் ஓங்கார ரீங்கார மாகித்
தவமுடைய வெவ்வெழுத்தும் நீர்தானாகும்
ஒவ்வொன்றும் உம் நமமோ நாராயணாவென்று
உன்பாதம் முச்சரித்து கந்துபோற்ற
அவ்வொன்று ரகுராமா கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்

5. உதிக்கின்ற சிவ சொரூப முனக்கேயாகும்
ஓம் அவ்வும் உவ்வுங்கிலியுருமென்றே
மதிக்கிசைந்த ஐந்தெழுத்தை வெளில் விட்டே
பச்சை முகில் மேனியே பணிந்தேனுன்னை
விதிக்கிசைந்த மெய்பொருளே அரிகோவிந்தா
விளக்கொளிபோல் மெய்த்தவனே விரும்பத்
தாதா அதற்கழசைந்த நடம்புரியும் கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாயே.

6. வேதமுதலாய் கிருந்தசிங்க ரூபம் விளங்குகின்ற
இரணியனை வதையே செய்தாய்
பூதமுதலாம் பிறவும் புண்ணிய நேயா
புகழ்ந்தவர் குதுஜன வருவாய் சோதைபுத்திரா
நாதமுதல் வீந்துவாயிருக்கெல்லாம்
நயம்பெறவே நினைந்திருக்கும்
வரதபிரமயாதவன் போல் நினைத்திருக்கும் கெருடன் மீதில்
சுவாமி அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முற்கோணநாற் கோண மொழிந்தைங் கோணமுச்
சுடரே யறுகோணம் மாகும்
அற்கோணநாற்பத்து மூன்று கோணம் தந்திரமும்
சிதம்பரமும் சகலசித்தும் மிக்கோண
மீது முதல்வ காரமட்டும் இறைவனாய்
தான் இருந்து இரட்சித்தாலும்
அக்கோணம் மீதிருந்து கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்.

8. பச்சைமுகில் மேனியனே உனக்கு இந்த
பார்தனிலே பத்தவதாரமுண்டு மச்சம்மென்றும்
கூர்மமென்றும் வராகமென்றும் வாமன்என்றும்
ராமன் என்றும் பவுத்தம் மென்றும் துஷ்டரை
அடக்க மோகினிவேஷம் கொண்டாய்
தோன்றினாய் உன் சொரூபமெல்லாம் அறிவாருண்டோ
அட்சம் தீர் தெனை ஆளக் கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்

9. வேதியனாய் தோன்றிவந்தாய் மாபாலிக்கு
விண்ணவர்காய் நரசிங்கரூபமானாய்
சாதியிலே ஆதவனாய்க் கிருஸ்ணனாகத்தான்
உதித்துவந்தாய் தரணிவாழ்க சோதனைகள்
பார்திருவோர் துதிப்போர் தம்மை துஷ்டர்களையும்
வதைசெய்து லோகமாழ்வாய்
ஆதிமுதலோர் ரெளுத்தே நீ கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்

10. மாயவனே ரகுராமா அருகே வாவா
வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில்
வாவா காயாம்புநிறமுடனே கனவில் வாவா
கருமுகில் மேனியனே எனக்கருதில் வாவா
நாயகனே என்நாவில் இருக்க வாவா
நாள்தோறும் உன்பாதம் துதிக்க வாவா
ஆயகுலத்துதித்தவனே கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முப்புரத்தை எரித்தவனே இப்போ வாவா
முகில்நிறனே ஜனநாதா முன்னே வாவா
எப்பொழுதும் முதிப்பவனே பங்கில் வாவா
ஏழைபங்கில் இருப்பவனே இறங்கி வாவா
ஒப்பில்லா மணிவிளக்கே யொழிபோல் வாவா
ஓம் நமோ நாராயணா உவந்துவாவா
அப்பனே ரகுராமா கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்

12. துளபமணிமார் பாசுகத்தை தாதா
சுருதியே மெய்ப்பொருளே வரத்தை தாதா
களபகஸ்தூரியனே கடாச்சந் தாதா
கஞ்சனை முன்வென்றவேனே கிருயை தாதா
பழம்பொருளே சிவசோதிபாக்கியம் தாதா
பத்திமுத்தி சித்தசெய்ய உன்பாதம் தாதா
அளவில்லா மெய்ப்பொருளே கெருடன் மீதில்
சுவாமி மீதில் அன்புடனே ஏறிவந்தருள் செய்குவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டல மிரண்டேழும் நீ

பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவும் நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்ற தாய் தந்தை நீயே

பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்த குரு நீ
புகழொணாக் கிரகங் ளொண்பதும் நீ யிந்தப்
புவனங்கள் பெற்றவனும் நீ

எண்ணிய ஜீவகோ டிகளீன்ற அப்பனே
என் குறைக ளார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
மறைந்த பிரம்மனாட

கோனாட வானுலகு கூட்டமெல் லாமாட
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாத் தண்டைபுலி யுடையாடக்
குழந்தை முருகேசனாட

ஞானசம் பந்தரொடு யிந்திரர்பதி னெட்டு
முனியாட பாலகருமாட
நரைதும்பை யறுகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையோட உனைப்பாட யெனை நாடி யிதுவேளை
விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

உடலென்ற புவிமீதில் அலையென்ற வுருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கண்டுண்டு நித்த நித்தம்

உடலென்ற கும்பிக்கு உணவென்ற யிரைதேடி
ஓயாம லிரவு பகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபய னடைந்தி லேனே

தடமென்ற மிடிகரையில் பந்தபா சங்களெனும்
தாபரம் பின்னலிட்டுத்
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ் வண்ணமாய்

இடையென்று கடைநின்று யேயென்று கேளா
திருப்பதுன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாய ப்ரவேச
மதுவல்ல சாலமல்ல

அம்புகுண் டுகள் விலக மொழியுமந் திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடி களல்ல
அரிய மோ கனமுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாங்
கூறிடும் வைத்யமல்ல

என்மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
யேதுளவு புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

நொந்துவந் தேனென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ

தோத்முந் தஞ்சமென் றடியைப் பிடித்த பின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகன் அறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானோ

விந்தையும் ஜாலமும் உன்னிட மிருக்குதே
விளையொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிது வல்லவோ

இந்தவுல கிரேழு மேனளித்தாய் சொல்லு
யினியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சையில் லாத போதிலும்
வாலாய மாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியெதுகை மோனை யிலாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழு காமி யேயாகினும்

பழியெனக் கல்லவே தாய் தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் ஏசார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுட லீந்தநீ
பாலகனைக் காக்கொண்ணாதோ ?

எழில் பெரிய அண்டங்க ளடுக்கா யமைத்த நீ
யென் குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

அன்னைதந் தைகளெனை யீன்றதற் கழுவனோ
அறிவிலா ததற் கழுவனோ
அல்லாமல் நான்முகம் தன்னையே நோவானோ
ஆசைமூன் றுக்கழுவானோ

முன்பிறவிப் பென்னவினை செய்தனென் றழுவனோ
மூடவறிவுக் கழுவனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவனோ
முந்திவருமென் றுணர்வானோ

தன்னை நொந் தழுவனோ உன்னை நொந் தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க் கழுவனோ
தரித்திர திசைக் கழுவனோ

இன்னமென் னப்பிறவி வருமோ வென்றழுகவோ
யெல்லா முரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயா முன் மரமீது பூ பிஞ் சறுத்தனோ
கன்னியர்கள் பழி கொண்டனோ
கடனென்று பொருள்பறித் தேவயி றெரித்தனோ
கிளை வழியில் முள்ளிட்டனோ
தாயா ருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ
தந்த பொரு ளிலை யென்றனோ
தானென்று கெர்வித்துக் கொலைகளவு செய்தனோ
தவசிகளை யேசினேனோ
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வானவரைப் பழித்திட்டேனோ
வடவைபோல் பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாத லோபி யென் றேபெய ரெடுத்தனோ
யெல்லாம் பொறுத் தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே
தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தரணியை யாண்டுமென்ன
சேயர்க ளிருந்தென்ன குருவா யிருந்தென்ன
சீடர் களிருந்து மென்ன
சித்து பல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிக ளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பலன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க
உதவுமோ யிதுவெல்லாம் சந்தையுற வென்றுதான்
உன்னிரு பதம் பிடித்தேன்
யார் மீது உன்மன மிருந்தாலு முன்கடைக்
கண்பார்வை யது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமுஞ் சொல்லவோ உன் மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இதுவுனக் கழகுதானோ
என்னென்ன மோகமோ இதுவென்ன கோபமோ
யிதுவுமுன் செய்கைதானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவேனோ
உன்னை விட்டெங்கு சென்றாலும்விழ லாவனோ
உனை யடுத்துங் கெடுவனோ
ஓகோவிது உன்குற்ற மென்குற்ற மொன்று மிலை
யுற்றுப்பார் பெற்றவையா !
என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய் குரு
சந்திரன் சூரிய னிவரை
சற்றெனக் குள்ளாகி ராசி பன்னிரெண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே

பனியொத்த நட்சத் திரங்களிரு பத்தேழும்
பக்குவப் படுத்திப் பின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டிப்
பலரையும் அதட்டி யென்முன்
கனிபோலவே பேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களையும் கசக்கி
கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்ப னாக்கி

இனியவள மருவு சிறு மணவைமுன் சாமியெனை
யாள்வதினி யுன்கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org